பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 03 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மாநிலங்களுக்கு கூடுதலாக **20** சதவீதம் வர்த்தக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயுவை மத்திய அரசு அனுமதித்துள்ளது.

**2.** திறன் மிக்க மனித சக்தியை உருவாக்குவதன் மூலம் நாட்டின் வளமான எதிர்காலம் உறுதி செய்யப்படுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**3.** மேற்காசிய நாடுகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் இந்தியாவில் மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகிற்கும் நெருக்கடியான சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

**4.** ஈரான் மீதான தாக்குதல்கள் ஒட்டுமொத்தமாக நிறுத்தப்பட வேண்டும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு **Seyed Abbas Araghchi** வலியுறுத்தியுள்ளார்.

**5.** எகிப்து சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Tanisha Kashyap-** எஸ்தோனியாவின் **Andrea Roots** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

மாநிலங்களுக்கு கூடுதலாக 20 சதவீதம் வர்த்தக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயுவை மத்திய அரசு அனுமதித்துள்ளது

இதனையடுத்து, ஒட்டுமொத்தமாக 50 சதவீதம் வர்த்தக பயன்பாட்டுக்கான எரிவாயு பயன்பாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உணவகங்கள், சாலையோர உணவகங்கள், விடுதிகள், தொழிற்சாலை கேன்டின்கள், மானிய விலை கேன்டின்கள் மற்றும் மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் நிறுவனங்களுக்கு இந்த கூடுதல் ஒதுக்கீட்டின்மூலம் வர்த்தக எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும்.

பெட்ரோல், டீசல் மற்றும் எல் பி ஜி எரிவாயு பற்றாக்குறை இல்லை என்றும் மத்திய அரசு உறுதி செய்துள்ளது.

மேற்காசியாவில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை அடுத்து அவற்றை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பெட்ரோலியத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

திறன் மிக்க மனித சக்தியை உருவாக்குவதன் மூலம் நாட்டின் வளமான எதிர்காலம் உறுதி செய்யப்படுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் மும்பையில், ரத்தன் டாடா திறன் மேம்பாட்டு பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், நாட்டின் திறன் மிக்க மனித ஆற்றல் ஒட்டுமொத்த உலகிற்கும் தேவைப்படுவதாக கூறினார்.

மனித ஆற்றலின் மையமாக இந்தியா வெற்றிநடை போட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் இளைஞர்கள் தங்களது பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மாணவர்கள் பெறும் பட்டங்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பை பெறுவதற்கு திறன் மேம்பாடு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை மாணவர்கள் கற்றுக்கொண்டு தங்களது ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>>

மேற்காசிய நாடுகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் இந்தியாவில் மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகிற்கும் நெருக்கடியான சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் ஹல்துவாணியில் மாநில அரசு நிகழ்ச்சியில் பேசிய அவர், இப்பகுதியில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக எரிபொருள் மற்றும் உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

இதனை சமாளிக்க இந்தியா முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈரான் மற்றும் மேற்காசிய நாடுகள் பிரச்சினைக்கு சமரச பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற தெளிவான நிலைப்பாட்டில் இந்தியா உள்ளதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>>

கோவிட் பெருந்தொற்றுக்கு பிறகு உலக பொருளாதாரம் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்ததாக வெளியுறவு அமைச்சகத்தின் பொருளாதார உறவுகளுக்கான செயலர் திரு சுதாகர் தலேலா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டையொட்டி நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் பேசிய அவர், புவிசார் அரசியல், வர்த்தகம், எரிசக்தி ஆகியவற்றில் பாதிப்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதன்காரணமாக, உலகளாவிய பொருளாதார வளர்ச்சி, முதலீடுகளும் குறைந்ததாக அவர் கூறினார்.

உலக நாடுகளின் பொருளாதார வர்த்தக கொள்கைகள் நிலையான பயன்களை தரவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியா உள்ளிட்ட வளர்ந்துவரும் நாடுகள் உலகளாவிய பொருளாதாரத்திற்கான கட்டமைப்பை மாற்றியமைத்ததன் விளைவாக, பொருளாதார வளர்ச்சியில் முக்கிய வழிகாட்டியாக உருவெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த இரண்டாயிரமாவது ஆண்டு ஒட்டுமொத்த உலக பொருளாதார உற்பத்தியில் வளர்ந்து வரும் நாடுகளின் பங்களிப்பு 21 சதவீதமாக

இருந்தது என்றும், ஆனால் இது தற்போது 42 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப உலக பொருளாதார அமைப்பு பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஒட்டுமொத்த உலக மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில், சர்வதேச வர்த்தக விதிமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலக வர்த்தக அமைப்பின் 14-ஆவது அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டில் மேலும் பல உறுதியான சீர்திருத்த நடவடிக்கைகள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் திரு சுதாகர் தலேலா வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

கேரளம் சட்டப்பேரவைத் தேர்தலில், பிஜேபி சார்பில் போட்டியிடும் 11 வேட்பாளர்கள் கொண்ட மூன்றாவது பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

இதில், **T N** சுரேஷ் — கோவளம் சட்டப்பேரவைத் தொகுதியிலும், **V** ரத்தீஷ் — பீறுமடை தொகுதியிலும், அஜிமோன் — மாவேலி தொகுதியிலும், விவேக் கோபாலன் — அருவிக்கரையிலும் போடியிடுகின்றனர்.

கட்சியின் மத்திய தேர்தல் குழு இந்த வேட்பாளர்களை இறுதி செய்துள்ளது.

கேரளம் சட்டப்பேரவையில் மொத்தம் உள்ள **140** உறுப்பினர்களுக்கான தேர்தல் அடுத்த மாதம் **9-**ஆம் தேதி நடைபெறவுள்ளது.

புதுச்சேரியில் பிஜேபி சார்பில் போட்டியிடும் ஒன்பது வேட்பாளர்கள் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஏ நமசிவாயம் மண்ணடிபேட்டையிலும், கல்யாண சுந்தரம் **Kalapet-**ஐ தொகுதியிலும், ராஜசேகரன் — திருநள்ளாறு தொகுதியிலும், தினேஷன் — மாஹே தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

**30** உறுப்பினர் கொண்ட புதுச்சேரி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் **9-**ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

திரிபுரா மாநிலத்தில் மருத்துவ பல்கலைக்கழகம் விரைவில் அமைக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு மாணிக் சாஹா தெரிவித்துள்ளார்.

அகர்தலாவில் இன்று பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கான பயிலரங்கை தொடங்கிவைத்து பேசிய அவர், மாநிலத்தில் மருத்துவ கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான ஒட்டுமொத்த செயல் திட்டம் வகுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மருத்துவ சிகிச்சைக்காக வெளி மாநிலங்களுக்கு மக்கள் செல்லும் நிலை மாறி, தாங்கள் வசிக்கும் பகுதியிலேயே மருத்துவ வசதி கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்றும் அவர் கூறினார்.

மருத்துவத்துறையில் திறன் மேம்பாட்டுக்கான பயிற்சித் திட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டு வருவதாகவும், இதனை மருத்துவ மாணவர்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், திரிபுரா முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<<>>>>>>

மணிப்பூர் மாநிலம் இம்பாலில் உள்ள மத்திய வேளாண் பல்கலைக்கழகத்தில் இளையோர் வேளாண் நாடாளுமன்ற நிகழ்ச்சியை மாநில ஆளுநர் திரு அஜய்குமார் பல்லா இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர் திரு அஜய்குமார் பல்லா, வேளாண் துறையில் எதிர்காலத்தை வடிவமைக்க இளைஞர்கள் பல்வேறு துறையினருடன் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்பை மூன்று நாள் வேளாண் நாடாளுமன்ற நிகழ்ச்சி ஏற்படுத்தி தந்திருப்பதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், வடகிழக்கு மாநிலங்களின் வேளாண் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட உள்ளன.

<<<<<<<>>>>>>>

ஈரான் மீதான தாக்குதல்கள் ஒட்டுமொத்தமாக நிறுத்தப்பட வேண்டும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் **Seyed Abbas Araghchi** வலியுறுத்தியுள்ளார்.

தொலைபேசி வாயிலாக ஊடகங்களுக்கு அவர் அளித்த பேட்டியில், அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து தங்கள் நாட்டின் மீது நடத்தும் தாக்குதல் சட்டவிரோதமானது என்றும், வெறுப்புணர்வை தூண்டும் வகையிலும் அமைந்துள்ளதாக கூறினார்.

தற்காலிக சண்டை நிறுத்தத்தை ஈரான் ஏற்காது என்றும் அவர் உறுதிபட தெரிவித்தார்.

போர் நிறுத்தத்திற்கான தீர்மானத்தில், எதிர்காலத்தில் இதுபோன்ற தாக்குதல் ஈரான் மீது நடத்தப்படாது என்றும், தாக்குதலால் ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்பதும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அமெரிக்கா போர் நிறுத்தத்திற்கான அறிவிப்பை நேர்மையாகவும், நியாயமாகவும் வெளியிட வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

**Hormuz** நீரினை வழியாக ஜப்பான் நாட்டின் கப்பல்கள் செல்வதற்கு அனுமதி அளிக்க தாங்கள் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டனில் ராணுவ தளங்களை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதி அளித்துள்ளதை தாம் கண்டிப்பதாக அவர் கூறினார்.

இதனிடையே, பிரிட்டனின் ராணுவ தளங்கள் மீதோ, நாட்டின் எல்லைக்கு உட்பட்ட எந்தவொரு பகுதியிலோ ஈரான் தாக்குதல் நடத்தினால் மேலும் பதற்றமான சூழ்நிலை ஏற்படும் என்றும் அந்நாட்டு உள்துறை அமைச்சர் வெட்டிகூப்பர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

<<<<<<<>>>>>>

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Tanisha Kashyap -** எஸ்தோனியாவின் **Andrea Roots** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-2, 6-4** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Madhurima Sawant —** சீனாவின் **Shiyu Ye** இணையை வென்றது.

---------------------

மும்பையில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் — ஜீவன் நெடுஞ்செழியன் இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, **6-3, 6-4** என்ற செட் கணக்கில், ஸ்வீடனின் **Leo Borg —** யுக்ரைனின் **Yurii Dzhavakian** இணையை வென்றது.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சித்தார்த் ராவத் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<<END>>>>>>>**